அதுமட்டுமல்ல. இந்திய அரசினர், பாராளுமன்ற இணைத் தேர்வுக் குழுவும், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், நலப் பணிகளில் ஈடுபட்டுள்ள பல்வேறு சங்கங்களும் பரிந்துரை செய்து தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர் பட்டியல்களில் சேர்க்குமாறு கோரிய பல்வேறு இனங்களைக் கொண்டு இந்திய அரசினரால் அவற்றின்மீது தமிழநாடு அரசின் குறிப்புரைகள் தருமாறு கோரி அனுப்பியுள்ள பட்டியல்களிலும் இந்த பண்டாரத்தார் இனம் இடம் பெறவில்லை. மேற்கண்ட காரணங்களால் இதைப் பரிசீலனை செய்வதற்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. மூர்த்தி.: தலைவரவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களின் பட்டியலிலே சேர்ப்பதற்கான நார்ம்ஸ் என்னென்ன? என்னென்ன தகுதிகள் இருக்கவேண்டும்? ரெட்டி, காப்பு, கம்மா போன்ற சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் முற்பட்டவர்கள். அவர்கள் மலைவாழ் மக்கள் போல போலிச் சான்றிதழ் பெற்று பல இடங்களிலே வேலைக்குச் சேர்ந்திருக்கிறார்கள். அந்தத் தகவல் அரசுக்குத் தெரியுமா? இப்படித் தெரிந்தால் அதுபற்றி அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவரவர்களே, மூலக்கேள்வி ஒரு குறிப்பிட்ட இனத்தைப் பற்றியது. ஒரு இனத்தைப் பழங்குடியினர் பட்டியலிலோ அல்லது தாழ்த்தப்பட்டவர்களின் பட்டியலிலோ சேர்க்கவேண்டும் என்றால் அதற்கான அனைத்து முயற்சிகளையும் எடுத்து அதிலே தனியாக கவனம் செலுத்தி மத்திய அரசுக்கு பரிந்துரை செய்வது மட்டுமே மாநில அரசினுடைய பணியாக இருந்துவருகிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியான இனங்கள் பற்றி தனிக்கேள்வி போட்டால் அதற்குரிய விடையளிக்கப்படும் என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

படாளம் கிராமத்தில் பழங்குடியினருக்கு கட்டிக் கொடுக்கப்பட்டுள்ள வீடுகள்.

*வினா எண். 180—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம் மதுராந்தகம் வட்டம் படாளம் கிராமத்தில் பழங்குடியினருக்கு கட்டிக் கொடுக்கப் பட்டுள்ள வீடுகள் இடிந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) புதிய குடியிருப்புகள் அம்மக்களுக்குக் கட்டிக் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) மதுராந்தகம் வட்டம், படாளம் கிராமத்தில் சமுதாய வளர்ச்சி திட்டத்தின் கீழ் 1960-ம் ஆண்டு இருளர் குடும்பங்களுக்கு 17 வீடுகள் கட்டப் பட்டன. தற்சமயம் அவைகளில் 8 வீடுகளில் இருளர்கள்

குடியிருந்து வருகிறார்கள். எஞ்சிய 9 வீடுகள் காலியாகவும் பழுதடைந்தும் உள்ளன. குடியிருக்கும் 8 வீடுகளில் 4 வீடுகள் நல்ல நிலைமையில் இருக்கின்றன. மற்றவை காலப் போக்கில் சரியாகப் பராமரிக்கப்படாததால் சேதமடைந்துள்ளன.

(ஆ) இல்லை.

திரு. எஸ். டி. உகம்சந்த்: தலைவரவர்களே, 17 வீடுகளில் 9 வீடுகள் பழுதடைந்துள்ளன என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்த குடியிருப்புகளை சீர் செய்யவும் அங்கே தண்ணீர் வழங்கவும் அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவரவர்களே, அரசினல் இதுவரை இலவசமாக வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டு வருகின்றதே தவிர அந்த வீடுகளைப் பராமரிக்கின்ற பணியினை வீட்டுக்கு உரியவர்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும். விதிமுறை அப்படித்தான் இருந்து வருகின்றது. அதிலே எந்த மாற்றத்தையும் செய்வதற்கு அரசு தயாராக இல்லை.

திரு. எஸ். டி. உகம்சந்த்: அங்கே வசிக்கின்ற இருளர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மிகவும் குறைந்த வருவாய் பெற்று வாழ்க்கை நடத்தி வருகிறார்கள். ஆகவே அவர்களால் அந்த குடியிருப்புகளை மீண்டும் சீர் செய்ய முடியாத நிலைமை இருப்பதால் அரசு அனுதாபத்தோடு அவர்களுடைய கோரிக்கையை ஏற்குமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவரவர்களே, ஏற்கெனவே நான் விடையளித்திருக்கிறேன். இப்போது நடைமுறையில் அந்தப் பழக்கம் இல்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கின்ற அடிப்படையில் அனுதாபத்தோடு ஏதாவது முயற்சியினை அரசு மேற்கொள்ளும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதைப்பற்றி தெரிவித்தால் அனுதாபத்தோடு அரசு பரிசீலனை செய்யும்.

திரு. இரா. கருப்பையா: தலைவரவர்களே, ஆதி திராவிட மக்கள் அவர்களுக்குச் சொந்தமாக வீடு கட்டிக் கொள்ள வசதி இல்லாமல் இருப்பதால்தான் அரசு இம்மாதிரி இலவசமாக வீடு கட்டிக் கொடுக்கின்றது. அரசால் ஆதி திராவிட மக்களுக்கென்று கட்டிக்கொடுக்கப்பட்ட வீடுகளைப் பழுதுபார்க்கக்கூடிய பொறுப்பும் அரசுக்கு இருக்கின்றது. ஆகவே அதற்காகவும் தனியாக நிதி ஒதுக்கீடு செய்து தரவேண்டும் என்பது அவசியம். ஆகவே அவ்வாறு அரசு கட்டிக் கொடுத்த வீடுகளைப் பழுது பார்ப்பதற்குரிய வகையிலே நிதி ஒதுக்கீடு செய்து அவர்களுக்கு உதவக்கூடிய முறையிலே அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எம். விஜயசாரதி: தலைவரவர்களே, நான் ஏற்கெனவே இதற்கு விடையளித்திருக்கிறேன். தற்போது நடைமுறையில் அந்தப் பழக்கம் இல்லாத காரணத்தால்

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொல்கிற அனுதாபத்தின் அடிப்படையிலே வருங்காலங்களில் இதுபற்றிய முயற்சிகளை எடுக்கலாம்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆதித் திராவிடர்களுக்கு, இப்பொழுது மட்டும் அல்ல காங்கிரஸ் கட்சிக் காலத்திலிருந்தே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலிருந்தே அவர்களுக்கு கட்டுகிற கட்டிடங்கள் எல்லாம், கான்டிராக்ட் முறையில் விடப்படுவதால், அந்தக் கட்டிடங்களுக்காக ஒதுக்கப்படுகிற தொகை முழுமையான அளவில் பயன்பெறுவதில்லை என்பதோடு, கட்டிடங்கள் வெகு சீக்கிரத்திலேயே பழுது அடைந்துவிடுகின்றன. ஆகவே, கட்டிடம் சேதம் அடைவதற்குக் காரணம் குடியிருப்பவர்கள் அல்ல. அரசாங்கத்தின் பெயரால் கட்டப்படுவதால், இதை அரசு துரிதமாக பரிசீலனை செய்து, அரசு கட்டிடங்கள் குடியிருப்பவர்களுக்கு பாதுகாப்பு வழங்கக்கூடிய முறையில், ரிப்பேர்கள் செய்து கொடுப்பதற்கு விரைவில் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: துணைத் தலைவர் அவர்களே, கொடுக்கப்பட்டிருக்கிற கேள்வி பழங்குடி மக்கள் பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆதித் திராவிடர்களுக்கு கட்டிக் கொடுக்கப்பட்ட இலவச வீடுகளைப் பற்றி கேட்கிறார்கள். வீடுகளைக் கட்டித் தந்ததில் ஏதாவது குறை இருப்பின் அரசுக்குத் தெரிவித்தால், சம்பந்தப்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.
தொகுதிகள் குறித்து.

திரு அ. செல்வராசன்: துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர், நேற்றையதினம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகிறபோது அனைத்துக் கட்சிகளும் ஒன்றாகச் சேர்ந்து நல்ல காரியங்களை இந்த நாட்டுக்குச் செய்ய முன் வரவேண்டும் என்று சொன்னார்கள். நல்ல வேண்டுகோள்தான். . . . (மணியடிக்கப்பெற்றது) என் தொகுதியைப் பொறுத்தவரையில். . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இவைகள் எல்லாம் பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது. தொகுதியைப் பற்றி பாயின்ட் ஆப் ஆர்டரில் கேட்க முடியாது. திரு. இரெ. இராசமாணிக்கம்.